தி.மு.க. இலக்கிய அணி - ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

18 ஆம் பக்கத் தொடர்ச்சி

கானம் பேரூர்

அமைப்பாளர் - மு. பார்த்திபன் 16/4, மேலத் தெரு, சோனகன்விளை, தூத்துக்குடி - 628201.

துணை அமைப்பாளர்கள் - 1) ஞா. ஜான் 138/2, தெற்கு தெரு, சோனகன்விளை, தூத்துக்குடி - 628201. 2) மு. முத்துராஜ் 67/6, புதுமனை, மேலக்கானம், தூத்துக்குடி - 628201. 3) மு. அசோக் 78/8, மேலத் தெரு, கானம் கஸ்பா தூத்துக்குடி - 628201.

ஆத்தூர் பேரூர்

அமைப்பாளர் - சு. சங்கரநாராயணன் 45/ஏ, முத்தாரம்மன் கோவில் தெரு, ஆத்தூர், தூத்துக்குடி - 628151.

துணை அமைப்பாளர்கள் - 1) ப. கோமுதுரை 72, முத்தாரம்மன் கோவில் தெரு, ஆத்தூர், தூத்துக்குடி - 628151. 2) கி. ஆறுமுகம் 37, தளவாய் சாமி தெரு, ஆத்தூர், தூத்துக்குடி - 628151. 3) ரா. ஆறுமுகம் 14/ஏ, முத்தாரம்மன் கோவில் தெரு, ஆத்தூர், தூத்துக்குடி - 628151.

தென்திருப்பேரை பேரூர்

அமைப்பாளர் - ச. மாரிமுத்து 17/5, அண்ணா நகர், தென்திருப்பேரை தூத்துக்குடி - 628623.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. கருப்பசாமி 34, பிள்ளையார் கோவில் தெரு, மேல கல்லாம்பாறை, தென்திருப்பேரை, தூத்துக்குடி - 628623. 2) வி. செந்தில் 26, கீழத் தெரு, கீழ கல்லாம்பாறை, தென்திருப்பேரை, தூத்துக்குடி - 628623. 3) மா. துர்கைராஜா 48, வடக்கூர், மேல கல்லாம்பாறை, தென்திருப்பேரை, தூத்துக்குடி - 628623.

நாசரேத் பேரூர்

அமைப்பாளர் - ஜெ. அருள்ராஜ் 24, மர்காஷியஸ் ரோடு, நாசரேத், தூத்துக்குடி - 628617.

துணை அமைப்பாளர்கள் - 1) மா. காசிராஜன் 7, ஜெயபாண்டியன் தெரு, நாசரேத், தூத்துக்குடி - 628617. 2) எஸ். அய்யாகுட்டி 2வது ஜசக் தெரு, நாசரேத், தூத்துக்குடி - 628617. 3) எஸ். சாமிக்கண் 20, வியாபாரிகள் தெரு, நாசரேத், தூத்துக்குடி - 628617.

ஆழ்வார்திருநகரி பேரூர்

அமைப்பாளர் - ஜெ. ஜெபர்சன் 37/47, பாரதியார் தெரு, ஆழ்வார்திருநகரி, தூத்துக்குடி - 628612.

துணை அமைப்பாளர்கள் - 1) சு. லதா 85, அண்ணா நகர், ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி - 628612. 2) செ. செங்கமலை கண்ணன் 56, வாய்க்காங்கரை தெரு, ஆழ்வார்திருநகரி, தூத்துக்குடி - 628612. 3) ம. முகேஷ் 18, பாரதியார் தெரு, ஆழ்வார் திருநகரி, தூத்துக்குடி - 628612.

உடன்குடி பேரூர்

அமைப்பாளர் - ரா. ராமஜெயம் 25/42இ வைத்தியலிங்கபுரம், மேலத் தெரு, உடன்குடி, தூத்துக்குடி - 628203.

துணை அமைப்பாளர்கள் - 1) பே. பாலகிருஷ்ணன் 2, வைத்தியலிங்கபுரம் மேலத் தெரு, உடன்குடி, தூத்துக்குடி - 628203. 2) மா. ராமச்சந்திரன் 7/1, அம்மன் கோவில் தெரு, உடன்குடி, தூத்துக்குடி - 628203. 3) ரா. குணசேகர் 18/ஏ, சோமநாதபுரம், உடன்குடி, தூத்துக்குடி - 628203.

ஏரல் பேரூர்

அமைப்பாளர் - சு. சந்திரசேகரன் 66, பிள்ளைமார் தெரு, ஏரல், தூத்துக்குடி - 628801.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.சுடலைமுத்து 22/9, வாணுவசெட்டிமார் தெரு, ஏரல், தூத்துக்குடி - 628801. 2) பா. சேர்மராசன் 6/38, மெயின் ரோடு, திருவழுதிநாடார் விளை, ஏரல், தூத்துக்குடி - 628801. 3) ம. இசக்கிமுத்து 99, தெற்கு தெரு, திருவழுதி நாடார் விளை, ஏரல், தூத்துக்குடி - 628801.

சாயர்புரம் பேரூர்

அமைப்பாளர் - கே. ஜான்சன்பொன்சிங் 2, தாமஸ் தெரு, சாயர்புரம், தூத்துக்குடி - 628251.

துணை அமைப்பாளர்கள் - 1) தி. காளிதாஸ் 14, உச்சினி மாகாளி அம்மன் கோயில் தெரு, நடுவைக்குறிச்சி, சாயர்புரம், தூத்துக்குடி - 628251. 2) பி. ஜெபஸ்டின் 10, கோபாலகிருஷ்ணன் தெரு, செபத்தையாபுரம், சாயர்புரம், தூத்துக்குடி - 628251. 3) டி. செண்பகராஜ் 17, புது நயினார்புரம், சாயர்புரம், தூத்துக்குடி - 628251.

திருவைகுண்டம் பேரூர்

அமைப்பாளர் - சு. ராஜ்மோகன் 149, கீழகோட்டை வாசல் தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி - 628601.

துணை அமைப்பாளர்கள் - 1) ம. சிந்தா செல்வராஜ் 26/60, கீழக்கோட்டை வாசல் தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி - 628601. 2) வேல்ராஜ் 6/3, முத்தாரம்மன் கோவில் தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி - 628601. 3) தி. கலாவதி 14/11, அரசாழ்வார் கோவில் கீழத் தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி - 628601.

பெருங்குளம் பேரூர்

அமைப்பாளர் - சி. சுந்தரபாண்டியன் 18/33ஏ, உண்டியலூர் வடக்கு தெரு, பெருங்குளம், தூத்துக்குடி - 628752.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். முத்து 13/9, உண்டியலூர் வடக்கு தெரு, பெருங்குளம், தூத்துக்குடி - 628752. 2) எ. அகஸ்டின் (எ) மாடசாமி 21/பி, ஆலடியூர் கீழத் தெரு, பெருங்குளம், தூத்துக்குடி - 628752. 3) எ. ராஜ்குமார் 1, ஆலடியூர் கிழக்கு, பெருங்குளம், தூத்துக்குடி - 628752.

சாத்தான்குளம் பேரூர்

அமைப்பாளர் - கா. கீதாகோபால் 37/30, சாயக்கார தெரு, சாத்தான்குளம், தூத்துக்குடி - 628704.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. முத்துராஜா 20, காலனி தெரு - 2, சாத்தான்குளம், தூத்துக்குடி - 628704. 2) ந. குமரேசன் 27, ஆர்.சி. சன்னதித் தெரு, சாத்தான்குளம், தூத்துக்குடி - 628704. 3) மு.ஆர்த்திலெட்சுமி 34/48, பழைய வேதக்கோவில் தெரு, சாத்தான்குளம், தூத்துக்குடி - 628704.

தூத்துக்குடி மாநகரம்

ஸ்பிக் நகர் பகுதி

அமைப்பாளர் - எஸ். பெரியசாமி 5/145ஏ74, பாரதி நகர் 4வது தெரு, முத்தையாபுரம் தூத்துக்குடி - 628005.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. சந்தானம் 5/317, வ.உ.சி. நகர், முத்தையாபுரம், தூத்துக்குடி - 628005. 2) க. ஜான்முருகன் 5/1069, பாரதி நகர், 4வது தெரு, முத்தையாபுரம் தூத்துக்குடி - 628005. 3) ம. அமிர்தம் 5/135ஏ4, பாரதி நகர், 4வது தெரு, முத்தையாபுரம் தூத்துக்குடி - 628005. 4) பா. சுகிதா 5/162டி/7ஏ, பாரதி நகர், 4வது தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி - 628005.

அன்னை இந்திரா நகர் பகுதி

அமைப்பாளர் - பாலசுப்ரமணியன் 4/860, டி.என்.எச்.பி, காலனி, எட்டையாபுரம் ரோடு, தூத்துக்குடி - 628002.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். முனியசாமி 5/37, அய்யப்பன் நகர் 2வது தெரு, தூத்துக்குடி - 628002. 2) எம். மாறன் 4ஏ/சி225 டி.என்.எச்.பி, காலனி, தூத்துக்குடி - 628002. 3) எஸ். பரமசிவன் 4/16, காமராஜ் நகர், தூத்துக்குடி - 628002. 4) எஸ். சௌந்திரபாண்டி 4/108 காமராஜ் நகர், தூத்துக்குடி - 628002.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 07-04-2025.

வி.பி.கலைராஜன்
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி

முதல்வரின் 4 ஆண்டுகால ஆட்சியில் 5,45,576 வீடுகள் கட்டப்பட்டு சாதனை!

திரு.வி.க. நகர் தொகுதியில் வீட்டுமனைகளுக்கான விற்பனைப் பத்திரங்களை உடனே வழங்கிட வேண்டும்!

சட்டப்பேரவையில் ப.தாயகம் கவி பேச்சு!

சென்னை, ஏப்.9 –

சட்டப்பேரவையில் வீட்டு வசதி வாரிய மானியக் கோரிக்கையில் பேசிய திரு.வி.க. நகர் தொகுதி கழக உறுப்பினர் ப.தாயகம் கவி, முதல்வரின் 4 ஆண்டு கால ஆட்சியில் 5,45,576 வீடுகள் கட்டி சாதனை படைக்கப்பட் டுள்ளது என்றும் திரு.வி.க. நகர் தொகுதியில் வீட்டு மனைகளுக்கான விற்பனை பத்திரங்களை உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் வீட்டு வசதி வாரிய மானியக் கோரிக்கையில் ப.தாயகம் கவி பேசியதாவது:–

அடியெடுத்து வைப்பதிலே அறிஞர் அண்ணாவை, படை நடுங்க வைப்பதிலே தந்தை பெரியாரை, கருத்துகளை பொழிவதிலே முத்தமிழறிஞர் கலைஞரை நாளும் எங்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

வெல்கின்ற விழியாலும், கள்ள மற்ற சிரிப்பினாலும், செல்வாக்கு, பெருமை இவை சிறிதேனும் கருதாமல் எல்லோரிடத்திலும் ஒட்டி உறவாடுகின்ற தன்மையாலும், எங்களது இதயங்களில் நீக்கமற நிறைந்து எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிற, எதிர்காலத்திலும் வழிநடத்த இருக்கின்ற, எதிர்காலத்தில் இத்தமிழகத்தை ஆட்சி செய்யவிருக்கின்ற துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் துரைமுருகன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர், அன்புச் சகோதரர் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், அரசுக் கொறடா ராமசந்திரன் அவர்களுக்கும் என் வணக்கம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

என்று ஒன்றிய அரசினுடைய நிதிப் பகிர்வினை எதிர்த்து, ஒன்றிய அரசினுடைய மும்மொழிக் கொள்கையை எதிர்த்து, ஒன்றிய அரசினுடைய மறுசீரமைப்பை எதிர்த்து குரல் கொடுத்து மாநில உரிமைகளையும், தாய்மொழித் தமிழையும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவர் முதலமைச்சர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

போராட்டக் களத்தில் முதல்வர்!'

அத்தகைய சிறப்புக்குரிய முதலமைச்சர் அவர்களைப் பற்றி இலண்டன் மாநகரில் இருந்து வெளிவருகின்ற ஒரு பிரபல நாளேடு The Economist என்கிற ஒரு நாளேடு நம்முடைய கழக தலைவர், முதலமைச்சர் அவர்கள் பற்றி ஒரு கட்டுரையை கடந்த 27.3.2025 அன்று வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையில் அது சொல்கின்ற செய்தி, போராட்ட களத்தில் முதலமைச்சர் அவர்கள் தனது தந்தையின் வழியில் நடைபோடுவது மட்டுமல்லாமல், வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தை பதிவு செய்திருக்கிறார் என்ற செய்தியை அந்த நாளேடு குறிப்பிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த நாளேடு தொகுதி மறுசீரமைப்பை மையப்படுத்தி இத்தகைய கருத்தை தெரிவித்திருந்தாலும்கூட அதையும் தாண்டி எந்தெந்த வகைகளில், எந்தெந்த சமயங்களில் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தொலைநோக்குப் பார்வையால் வரலாற்றில் தனக்கான இடத்தை பதிவு செய்திருக்கிறார்கள் என்று பார்ப்போமேயானால், பட்டினியோடு பள்ளிகளுக்கு வருகின்ற குழந்தைகளுக்கு காலை உணவை வழங்கிய தன்மூலம் வரலாற்றில் தனக்கான இடத்தை பதிவு செய்திருக்கிறார்கள். புதுமைப் பெண் திட்டத்தின்மூலம் கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களின் கனவை நிறைவேற்றியதால் வரலாற்றில் தனக்கான இடத்தை பதிவு செய்திருக்கிறார்கள். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்தை வழங்கியதன்மூலம் பெண்களின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருப்பதன்மூலம் வரலாற்றில் தனக்கான இடத்தை முதலமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள், மகளிர் உரிமைத் தொகை வழங்கியதன்மூலம், மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகுத்து, தமிழ்நாட்டு வரலாற்றில் தனக்கான இடத்தைப் பதிவுசெய்திருக்கிறார்கள்.

துணை முதலமைச்சர் அவர்கள், அனைவரது கோரிக்கையை ஏற்று, மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில், சதுரங்க விளையாட்டைக் கொண்டுவர வழிவகுத்திருப்பதன்மூலமாக வரலாற்றில் தங்கள் இடத்தைப் பதிவுசெய்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள், இது போன்ற எண்ணற்ற சாதனைகளைச் செய்துவருகிறார்கள். இதற்கு முன்னால் தமிழகத்தை ஆண்ட நம்

முடைய நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் இதுபோன்ற பல்வேறு வரலாற்று சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், 1970 ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்தியத் துணைக் காண்டத்திலேயே எங்கும் இல்லாத அளவில், முதன்முறையாக, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒன்றைத் தோற்றுவித்து, குடிசைப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அனைவரையும், கான்கிரீட் வீடுகளிலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளிலும் குடியமர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, கொண்டுவரப்பட்ட ஒரு வாரியம் தான் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கவிச்சுடர் கவிதைப் பித்தன் கவிதை!

இந்தத் தருணத்தில், கவிச் சுடர் கவிதைப் பித்தன் அவர்கள் எழுதிய கவிதை ஒன்று நினைவிற்கு வருகிறது.

"மண் குடிசை ஓட்டைகளை எத்தனை நாள் தாங்குவோம்
மழை பொழிந்தால் ஒழுகாத வீட்டினிலே எப்போது தூங்குவோம்
கூடு என்று கலையும் என்று நொடிக்கு நொடி அச்சங்கள்,
வாழகின்ற உரிமையில் என்ன பாரபட்சங்கள்
மெத்தை வீடு எங்களுக்கு என்று தான் கிடைக்கும்
மின்விளக்கின் ஒளியினிலே நாங்கள் எப்போது படிப்போம்
தத்திக் கடல் அலைகளைப் போல என்று துள்ளி நடப்பது?
கான்கிரீட்டில் கிணறு வெட்டி நாங்கள் என்று வசிப்பது?

என்ற ஒரு கவிதையை கவிச் சுடர் கவிதைப் பித்தன் அவர்கள் எழுதியிருப்பார்கள்.

அந்தக் கவிஞர், சராசரி ஏழை மக்கள் காணுகின்ற கனவை, அந்தக் கவிதையில் சொல்லியிருக்கிறார். அந்த சராசரி ஏழை மக்கள் காணுகின்ற கனவை மெய்ப்பிக்கின்ற நோக்கத்தோடு, துன்பத்தின் எல்லையிலிருந்து அந்த மக்கள் அனுபவிக்கின்ற கொடுமைகளை சிந்தித்துப் பார்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டுவந்து, அந்த ஏழை மக்களை கான்கிரீட் வீடுகளிலும், அடுக்கு மாடிக் குடியிருப்புகளிலும் அமரவைத்து அழகு பார்த்தார்கள். அப்படிப்பட்ட அந்த குடிசை மாற்று வாரியத்தில்தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், 19–2021 அன்று இந்தக்கால சூழலுக்கேற்ப, குடிசை மாற்று வாரியம் என்ற பெயரை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மாற்றினார்கள். நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மாற்றப்பட்டதிலிருந்து, இதுநாள் வரையில், அந்த வாரியம் சாதித்திருக்கின்ற சாதனைகள் என்ன என்பதை, சற்றே நாம் பின்னோக்கிப் பார்த்தோமானால், உண்மையிலேயே வியப்பாக இருக்கும். காரணம், மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் அந்த வாரியத்தின் சார்பில் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் தரப்பட்டது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், 23–வது பக்கத்திலிருந்து 33–வது பக்கம் வரையில், பல்வேறு செய்திகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அடுக்கு மாடி குடியிருப்புகள்!

குறிப்பாக பக்க எண்கள் 37லும், 38லும், "செயல்பாடுகளின் தற்போதைய நிலை என்ற தலைப்பில் ஒரு பட்டியலே அளித்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில், இந்த நான்காண்டு காலத்தில், இந்த வாரியத்தின்மூலம் எவ்வளவு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்ற என்பதைப் பார்க்கும்போது, இது வரை கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடிக் குடியிருப்புகள், 74,597 ஆகும். அடுக்குமாடிக் குடியிருப்புகளாகக் கட்டப்பட்டு, இன்றும் பணிகள் நிறைவடையாத வீடுகள், 66,921. தாமாக முன்வந்து கட்டுகின்ற வீடுகள் திட்டத்தின்கீழ், 3,36,552 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. தனி வீடுகள் கட்டுதல் திட்டத்தில், கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை, 67,506 ஆகும். அனைத்து வீடுகளையும் கூட்டினால், கிட்டத்தட்ட 5,45,576 வீடுகள் இந்த நான்காண்டு காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது மாத்திரம் அல்ல. பழுது பார்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளின்கீழ் இதுவரை செய்து முடிக்கப்பட்டு பயனடைந்த வீடுகளின் எண்ணிக்கை, 76,434 ஆகும்.

சரி நம்முடைய ஆட்சிக் காலத்தில் இவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இதுமட்டுமா என்று பார்த்தால், இதுமட்டுமில்லை. முதலமைச்சர் அவர்கள் இன்னும் நிறைய செய்திருக்கிறார். கடந்தகால ஆட்சியில் அறிவிப்புகளாக வெளியிட்டு துவங்கப்பட்ட பணிகள் எல்லாம், இந்த ஆட்சியில் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு, எந்தத் திட்டங்களை அறிவித்துவிட்டு, பாதியிலே விட்டுச் சென்றார்களோ, அந்தத் திட்டங்களை முழுமைப்படுத்திய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். மொத்தம் 31,197 குடியிருப்புகள். அந்தக் குடியிருப்புகள் எங்கே அமைக்கப்படும் என்று பார்க்கும் போது, துறைமுகம் தொகுதி கல்யாணபுரத்திலே 972 குடியிருப்புகளும், அம்பத்தூர் அத்திப்பட்டு பகுதியில் 540 குடியிருப்புகளும், வில்லிவாக்கம் என்.வி.நகர் பகுதியில் 840 குடியிருப்புகளும், எழும்பூர் தொகுதி, சந்தோஷ் நகர், மீனாம்பாள் சிவராஜ் நகரில் 880 குடியிருப்புகளும், ஆர்.கே.நகர் கைலாஷபுரத்தில் 392 குடியிருப்புகளும், ராயபுரம் மூலக்கொத்தளத்தில் 1,044 குடியிருப்புகளும், பெரம்பூர் மூர்த்திங்கர் தெரு 360 குடியிருப்புகளும், திருவொற்றியூர் எர்ணாவூர் பகுதியில் 68,077 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை தொகுதிகளான தோபிகானா, வாழைத் தோப்பு, அப்பாவு நகரில் 1552 குடியிருப்புகளும், மைலாப்பூர் தொகுதியில் சீனிவாசபுரம், குப்பை மேடு, டொமின் குப்பம், வள்ளீஸ்வரன் கோயில் தோட்டம், ஜோகிர் தோட்டம், ஆண்டியத்மான் தோட்டம், அதேபோன்று காந்தி நகர், PM தர்கா என்ற பகுதியில் ஒட்டுமொத்தமாக 4,102 குடியிருப்புகளும்,

கடந்த ஆட்சியில் அறிவிப்பு மட்டுமே!

இதையும் தாண்டி சொல்ல வேண்டும் என்று சொன்னால் காஞ்சிபுரம் தொகுதி, தாம்பரம் தொகுதி, மாதவரம், மணலி, பொன்னேரி, ஆவடி, திருத்தணி, திருவள்ளூர், ஆண்டிப்பட்டி, கம்பம், வேப்பனஹள்ளி, பாலக்கோடு, ஒட்டப்பிடாரம், பாளையங்கோட்டை, அதேபோன்று, கன்னியாகுமரி, மேட்டுப்பாளையம், சேலம் வடக்கு காரைக்குடி என்று ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 31,197 வீடுகளை கட்டுவதாக கடந்தகால ஆட்சியில் அறிவிக்கப்பட்டது. ஆனால், பணிகள் முழுமை பெறவில்லை. காரணம் அந்தத் திட்டங்களை அறிவிக்கின்றபோது முறைப்படி திட்ட முன்அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், பெறவில்லை. DTCP அனுமதி பெற்றிருக்க வேண்டும். பெறவில்லை. சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். பெறவில்லை. அதேபோன்று RERAவின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், திட்டங்கள் அறிவிக்கப்பட்டதைத் தவிர, எந்த அனுமதியும் பெறாத காரணத்தினால், அதற்கு அடுத்து ஆட்சிக்கு வந்த திராவிட மாடல் ஆட்சியில் தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, எந்தப் பணிகள் எல்லாம் நிறைவடையாமல் இருக்கின்றனவோ அந்த அத்தனைப் பணிகளுக்கும், திட்ட அனுமதி, DTCP அனுமதி, வரைபட அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி போன்ற அனுமதிகளையும், RERAவின் ஒப்புதலையும் பெற்று, முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட்டு அவை அத்தனையும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நிலை திராவிட மாடல் ஆட்சியில் நடந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமட்டுமா என்று பார்த்தால், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் பல்வேறு சாதனைகளை முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

கிளாம்பாக்கம் பேருந்து முனையம்!

நேற்றையதினம் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் 42வது பக்கத்தில் ஒரு செய்தி. அதாவது, கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் உள்ள சிறப்புகளை பட்டியலிட்டு, கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்த செய்தி அதில் இடம்பெற்றிருக்கிறது. நான் சொல்ல வருவது என்னவென்றால், கடந்தகால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் இரண்டு. போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக கிளாம்பாக்கத்தில் ஒரு பேருந்து முனையம், குத்தம்பாக்கத்தில் ஒரு பேருந்து நிலையம் என்று கடந்தகால ஆட்சியில் அறிவித்தார்கள். கிளாம்பாக்கம் பேருந்து முனையம் அமைப்பதற்காக அறிவிப்பு அறிவிக்கப்பட்டு, 2013 ஆம் ஆண்டு பணிகளுக்காக திட்டமிடப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால், 2013 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டாலும், 2018 ஆம் ஆண்டு tender விடப்பட்டது. 2019ல் பணிகள் தொடங்கப்பட்டன. அந்தப் பணிகள் தொடங்கப்பட்டாலும்கூட 30 சதவிகித பணிகள் மட்டுமே கடந்த கால ஆட்சியில் முடிக்கப்பட்டன. முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற திராவிட மாடல் ஆட்சி மீதமுள்ள 70 சதவிகித பணிகளை 28 மாதங்களில் செய்துகாட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

குத்தம்பாக்கம் பேருந்து முனையம்!

அதேபோன்று குத்தம்பாக்கம் பேருந்து முனையமும், கடந்தகால ஆட்சியில் அறிவிக்கப்பட்ட திட்டம். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதுவும் திராவிட மாடல் ஆட்சியில் பணிகள் முழுமையாக செய்யப்பட்டு, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் வர இருக்கின்ற மகிழ்ச்சியான செய்தி வந்துகொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல; வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து முதலமைச்சர் அவர்கள் கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1,383 கோடி ரூபாய் மதிப்பிலான 79 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதுடன், 29 முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அதையும் தாண்டி, உங்கள் தொகுதியில் முதல்வர் என்ற திட்டத்தின்கீழ், எனது தொகுதி சார்பாக 10 முக்கியக் கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருந்தேன். அவற்றில் 3 கோரிக்கைகள், உடனடியாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நிறைவேற்றித் தரப்பட்டுள்ளன.

முதல்வருக்கு நன்றி!

ஒன்று, கன்னிகாபுரம் விளையாட்டுத் திடல் மேம்படுத்தப்பட்டு, அந்தப் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது. அடுத்து, பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் டோபிகானா என்றழைக்கப்படும் சலவையாளர் கூடமும் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. அடுத்து, கொன்னூர் நெடுஞ்சாலையில் ஒரு திருமண மண்டபப் பணிக்கும், டெண்டர் விடப்பட்டு, விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளன. (மணியடிக்கப்பெற்றது) இந்த 3 பணிகளுக்கும் நன்றி சொல்ல வேண்டுமெனில், இந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தந்த காரணத்திற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த 3 திட்டங்களும் எனது தொகுதிக்கு கிடைப்பதற்குக் காரணமாகவும், பெரிதும் துணையாகவும் இருந்த துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, வீட்டு வசதி வாரியத்திலும், பல்வேறு சாதனைகள், கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 99ல் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, வழங்கப்பட்டுள்ள விற்பனைப் பத்திரங்களின் எண்ணிக்கை போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இதுவரை வழங்கப்பட்ட ஒதுக்கீடு ஆணைகளின் எண்ணிக்கை 5,908, விற்பனைப் பத்திரங்களின் எண்ணிக்கை 9,807. அவையும் தமிழ்மொழியில் வழங்கப்பட்டுள்ளன என்ற செய்தியைப் படித்தபோது, மகிழ்ச்சியின் நிறைநிலைக்குச் சென்றோம். மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 100ல் மற்றொரு செய்தியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 100ல் அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்பு மறுகட்டுமானம் செய்து தரப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதிலும் ஒரு செய்தி. அந்தத் திட்டமும் கடந்தகால ஆட்சயில் அறிவிக்கப்பட்ட திட்டம்தான். கடந்தகால ஆட்சியில் அரசு அலுவலர்களுக்கு 3,133 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும், அரியலூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், தேனி, கூடலூர், விருதுநகர் போன்ற பகுதிகளில் 3,133 அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படுவதாக அறிவித்தார்கள். ஆனால், அதையும் கட்டவில்லை. அதையும் கட்டித் தந்து நிறைவு செய்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் திராவிட மாடல் ஆட்சி என்று சொல்வதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போலவே, முதலமைச்சரின் முன்னெடுப்புத் திட்டத்தின்கீழ், தமிழகம் முழுவதிலும் சுமார் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ், பல்வேறு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. (மணியடிக்கப்பெற்றது)

கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் விடுவிக்கும் நோக்கத்தோடு மனுக்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் இதுவரை 2002–21 ஏக்கர் நிலங்கள் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்திலிருந்து விடுவி க்கப்பட்ட செய்தி மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய உரையை நான் நிறைவு செய்யும் தருணத்தில், என்னுடைய தொகுதியின் சார்பில் ஒரே